
ST.
CU
TH
BE
RT

# புனித கத்பெர்ட் (639-687)

இவர் இராணுவத்தில் சேர்ந்து ஒரு போரில் பங்கு பற்றினார். சமாதானம் ஏற்பட்ட பின் சந்தியாசியாகி, அறிவிலும் பரிசுத்த தனத்திலும் வளர்ந்து வந்தார். புதுமை செய்யும் வரத்தை கடவுள் இவருக்குத் தந்தார். பின் ரிப்பன் நகர் மடத்தில் விருந்தினரை வரவேற்று உபசரித்து வந்தார். மடத்தில் ஒரு பிளவு ஏற்பட்டது. ஆண்டவர் உயிர்த்த விழாவை எந்த நாளில் கொண்டாடுவது என்பதே பிளவின் காரணம். 664-ஆம் ஆண்டில் கூடிய சங்கம் உயிர்த்த விழா கொண்டாடப்படும் நாளை தீர்மானித்தது. அதற்கு அவர் கீழ்ப்படிந்தார். பின் இவரை ஒரு மடத்தின் தலைவராகக்கினார்கள். இவர் தமது விவேகத்தினாலும், பொறுமையினாலும், புனித வாழ்வாலும் சந்நியாசிகளை நல்லவர்களாகவும் கீழ்படிதல் உள்ளவர்களாகவும் ஆக்கினார். பின்னர் ஆயர் ஆனார். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை அர்ச்சிப்பதற்காக ஆர்வத்துடன் உழைத்து வெற்றி பெற்றார்.

**சிந்தனை:**

பெற்றோர், ஆசிரியர், ஆயர் குருக்கள் ஆகியோர் தங்களைச் சார்ந்தவர்களை புனிதப்படுத்துவதில் களைக்கும் வரை உழைக்க வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, திருச்சபைக்கு சிறந்த பெற்றோரை ஆசிரியர் ஆகியோரைத் தாரும்.